அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண் :128/2017

தேதி : 01/11/2017

## கொடுங்கையூரில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சிறுமிகள்

## அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
## நிறுவனத்தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்

வடகிழக்குப் பருவமழை தொடர்ந்துவரும் நிலையில், சென்னை கொடுங்கையூரில் பாவனா (10) யுவஸ்ரீ (8) என்ற 2 சிறுமிகள் மின்சாரம் தாக்கி உயிரிழந்த சம்பவம் மிகுந்த வேதனை அளிப்பதாக உள்ளது. மழைக்காலம் விளைவிக்கும் ஆபத்துக்களில் இப்படிப்பட்ட சம்பவங்களும் ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தி இருந்தேன்.

பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளை கவனமாகப் பார்த்துக்கொள்ள வேண்டிய தருணம் இது. மீண்டும் மீண்டும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடைபெறாமல் இருப்பதை அரசும், பொதுமக்களும் உறுதி செய்ய வேண்டும். சிறுமிகளை இழந்து வாடும் குடும்பத்தினர்களுக்கும், உறவினர்களுக்கும் என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**
நிறுவனத் தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com